DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.139/20

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name கணேசன் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.08.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் பிசிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எதிரியை தெரியும். 21.11.19 அன்று மதியம் 12.00 மணியளவில் என் அப்பா பிசிபட்டி வாட்டார் டேங்க் அருகே டிவிஎஸ் எக்சலில் சென்றுக்கொண்டிருந்தார். அந்த சமயத்தில் ரோட்டை குறுக்காக வடக்கிலிருந்து தெற்காக போய் வலது புறம்திரும்பு போது பின்னால் வந்த டவுன் பஸ் இடித்துவிட்டதாக ஈஸ்வரன் என்பவர் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்த போது எனது அப்பாவை ஆம்புலன்ஸ் மூலம் தேனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். நான் தேனி அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். அன்றையதினம் 3 மணிக்கு மேல் மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதற்கு பிறகு எனது அப்பா சிகிச்சையில் இருக்கும் போது 23.11.19 அன்று இறந்துவிட்டார். அது சம்மந்தமாக நான் பிசிபட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கொடுத்த புகார் வாக்குமூலம் அசாஆ 1. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

விபத்து சம்மந்தமாக நானும் என்னுடன் பிறந்தவர்களும் தேனி மாவட்ட நீதிமன்றத்தில் நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் எண் எம்சிஓபி 50/2021 என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு விபத்து நடந்த சமயத்தில் 70 வயது இருக்கும் என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு இருசக்கரவாகன ஓட்டுனர் உரிமமம் இல்லை என்றால் சரியல்ல இருந்தது. மேற்படி எனது அப்பா ஓட்டி சென்ற டிவிஎஸ்எக்சல் வாகனம் எனது சகோதரர் ராமசந்திரன் பெயரில் இருந்தது என்றால் சரிதான். இந்த வழககில் மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் எனது அண்ணன் ராமசந்திரனின் ஓட்டுனர் உரிமம் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் எனது தகப்பனார் உரிமம் கொடுக்கபடவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் எனது அப்பா புல் அறுத்துவிட்டபோய்விட்டுக்கொண்ருந்தார். சாட்சி மீண்டும் புல் அறுக்க போகும் போது விபதது ஏற்பட்டதாக கூறுகிறார். விபத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் ஈ்ஸ்வரன் சொல்லி தான் தெரியும் என்றாலும் சரிதான். என் அப்பாவிற்கு ஏற்பட்ட விபத்திற்கு நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய்யாக புகார் கொடுத்து அதற்கேற்ப பொய் சாடசியம் அளிக்கிறேன் என்றாலும் விபத்திற்கு காரணம் என் அப்பா தான் என்றாலும் சரியல்ல.